Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 68/2020**

**Deposition of PW.8 (LW.10)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜாராம் | ஜாதி | : | |
| த/பெ | : | கோபால் | தொழில் | : | ஓய்வுபெற்ற வனவர் |
| கிராமம் | : | திண்டுக்கல் | சமயம் | : | |
| தாலுகா | : | திண்டுக்கல் | வயது | : | 74/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.01.2026.

( A9 ஆஜர் . A1, A2, A3, A4, A5, A7, A10, A11, A14 ஆஜர் இல்லை, பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது. A6, A8, A12, A13 are died)

**முதல் விசாரணை**

நான் தற்போது தமிழ்நாடு வனத்துறையில் வனவராக பணிபுரிந்து ஓய்வு பெற்று திண்டுக்கல்லில் குடியிருந்து வருகிறேன். கடந்த 27.02.2004 ஆம் தேதி பகல் 02.30 மணியளவில் கன்னிவாடி வனச்சரக அலுவலகத்தில் வனக்காப்பளராக பணிபுரிந்தபோது, எங்களது கன்னிவாடி வனச்சரக அலுவலகத்தில் இருந்து என்னை அழைத்தன் பேரில் எங்களது வனச்சரக அலுவலகத்திற்கு சென்றேன். எங்களது வனச்சரக எல்லைக்குட்பட்ட பகுதியான திருமலைச்சாமி என்பவரது மகன் ராஜராம் என்பவரது பட்டா நிலத்தில் தோதகத்தி மரங்களை வெட்டுவதாக தகவல் கிடைத்ததன் பேரில் கன்னிவாடி வனச்சரக அலுவலரின் உத்தரவின் பேரில் கன்னிவாடி பிரிவு வனவர் பிச்சாண்டி என்பவர் தலைமையில் தனிக்குழுவாக நாங்கள் சென்றோம். நாங்கள் அன்றையதினம் சுமார் 03.30 மணியளவில் திருமலைசாமி மகன் ராஜாராம் பட்டா நிலத்திற்கு சென்று பார்த்தபோது, அங்கிருந்த தோதகத்தி மரங்களை சில நபர்கள் வெட்டிக்கொண்டிருந்தார்கள். அதில் நாங்கள் 5 நபர்களை பிடித்தோம். மற்ற நபர்கள் அங்கிருந்து ஓடிவிட்டார்கள். அப்போது அந்த நபர்கள் வெட்ட பயன்படுத்திய 2 கோடாரி, 2 ரம்மம், 1 அரிவாள் ஆகியவற்றை கைப்பற்றினோம். அந்த நபர்கள் வெட்டிய 28 துண்டுகள் இருந்தன. அப்போது அங்கு சுமார் 6 முதல் 8 மொட்டுகள்

இருந்தன. அந்த மரத்துண்டுகளை அளந்து பெயிண்டு அடித்து அதில் நம்பர் இடப்பட்டது. அப்போது எங்களுடன் இருந்த அந்த நிலத்தின் சொந்தக்காரர் ராஜாராம் என்பவரிடம் அந்த மரக்கட்டைகளை ஒப்படைத்துவிட்டோம். அப்போது அங்கிருந்த 5 நபர்களையும், அவர்கள் வெட்ட பயன்டுத்திய ஆயுதங்களையும் கன்னிவாடி வனச்சரக அலுவலகத்திற்கு கொண்டு வந்தோம். அந்த இடத்தில் மரங்களை கைப்பற்றியது சம்மந்தமாக கையெழுத்து செய்தேன். என்னிடம் காட்டப்படும் ஸ்தல மகசரில் உள்ள என்னுடைய கையெழுத்து மட்டும் **(அ.சா.ஆ.25/PW.8)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன்பின்பு சிரங்காடு கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்திற்கு சென்றோம். அங்கு அவர் இல்லாததால் அவர் உதவியாளரிடம் அந்த எதிரிகளையும், அவர்கள் பயன்டுத்திய ஆயுதங்களையும் காட்டினோம். அப்போது H. நமுனா தயார் செய்யப்பட்டு அவரிடம் கையெழுத்து வாங்கிய பின்பு மேல்நடவடிக்கைக்காக கன்னிவாடி வனச்சரக அலுவலகத்திற்கு எதிரிகளையும், பிடிபொருட்களையும் கொண்டுவந்தோம். அப்போது அங்கு வைத்து எதிரிகளை கன்னிவாடி வனச்சரகர் விசாரித்தார். அப்போது மற்ற எதிரிகள் இருந்த இடத்திற்கு சென்று அவர்களையும் கைது செய்தார்கள். பின்னர் வனச்சரக அலுவலகத்திற்கு கொண்டு வந்து அனைத்து எதிரிகளிடமும் வாக்குமூலம் பெறப்பட்டது. அதன்பின்பு எதிரிகளையும், எதிரிகள் பயன்டுத்திய பிடிபொருட்களையும் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினோம்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor